## காவலரண் அமைக்க கடற்படை சாக்கு எடுத்துவருமாறு மிரட்டல்

நெடுந்தீவில் இருந்து நேற்று பிரயாணிகள் படகு குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. காலையில் வந்த இப்படகை நயினாதீவு இறங்குதுறையில் கடற்படையினர் சோதனையிட்டபோது நெடுந்தீவில் இருந்து இரண்டாயிரம் வெற்றுச்சாக்கு களை ஏற்றி வருமாறு பணித்ததாகவும் அவ்வாறு ஏற்றி வராவிட்டால் இனிமேல் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பிறப்பு இறப்பு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க பலர் முண்டியடிப்பு

யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் காரியாலயத்தின் முன் சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் நேற்று பிறப்பு இறப்பு திருமண விண்ணப்பங்களை சமர்ப்பிப் பதற்காகக் கூடிநின்றார்கள். சகலருடைய விண்ணப் பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் நிவாரண நடவடிக்கைகள், அடையாள அட்டைகள் பெறுவோர், நேர்முகப்பரீட்சைக்குத் ...04-ம் பக்கம் பார்க்க

## வினாத்தாள் எடுத்துச்செல்ல 10 ஆட்டோக்கள் வாடகைக்கு

இன்று ஆரம்பமாகவுள்ள உயர்தர பரீட்சை வினாத்தாள்களை பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு யாழ் கல்வித் திணைக்களத்தால் 10 ஆட்டோக்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்களை எடுத்துச் செல்வதற்கே இவ் ஆட் டோக்கள் வாடகைக்கு — 4 ஆம் பக்கம் பார்க பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 146 பிரசோற்பத்தி சித்திரை 10 (23-04-1991) செவ்வாய்

## இறுதி முயற்சி

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளுக்கு இறுதி நேர முயற்சியாக அனுமதி அட்டை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை யாழ் கல்விப் பணிப்பாளரால் மேற் கொள்ளப்பட்டது. திருமலை, மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கே தொண்டர் நிறுவனம் மூலம் கொழும்புடன் உடனடியாக தொடர்பு கொண்டு அனுமதி அட்டை பெறுவதற்கு முயற்சியெடுக்கப்பட்டது

## ஆசிரியர்கள் வெளிநாடு செல்ல அனுமதி பெறவேண்டும்

ஆசிரியர் எவரும் வடஇழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன் அனுமதி பெறாமல் வேலை வாய்ப்பு விடயமாகவோ, அல்லது படிப்பை மேற்கொள்ளவோ வெளிநாடு செல்லமுடியாது என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல பிராந்திய கோட் டக்கல்வி அதிகாரிகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி யுள்ளனார். இவ்வாறு போகவிரும்பும் ஆசிரியர்களின் அனுமதிக்கான கடிதங்களை அவர்கள் வெளிநாடு செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே சம்பந் தப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரியின் சிபார்சுடன் வடஇழக்கு மாகாணக் கல்வி — 4 ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் அமைச்சர் காமினி கைது

# புல்ஜன்ஸ் கடத்தலில் சம்பந்தம்?

### 'அரசியல் பழிவாங்கல்' என்கிறார் அவர்

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். 1988இல் பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தப்பட்ட சம்பவத்தில் காமினிக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இவரைக் கைது செய்த பொலிஸார் சுமார் இருமணி நேரம் விசாரணை நடாத்தியுள்ளனர். விசாரணையில் காமினி திஸநாயக்கா புல்ஜன்ஸ் கடத்தப்பட்டதுக்கும் தமக்கும் தொடர்பில்லை என மறுத்துள்ளாராம் எனினும் இவர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை, இவ்வார இறுதியில் புல்ஜன்ஸ் கடத்தல் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும் போது ஏனைய சந்தேகநபர்களுடன் காமினியும் அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் விரைந்து சென்ற காமினி திஸநாயக்கா அண்மையில் — 4 ஆம் பக்கம் பார்க்க

## வலி வடக்கில் தாக்குதல்

வலிகாமம் வடக்குப்பகுதி இராணுவ முகாம்களில் இருந்து நேற்றுப் பிற்பகல் குடிமனைகளை நோக்கித் துப்பாக்கிச் சூடுகளும் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இதேவேளை கீரிமலையில் கடற்படைப்படகும் தாக்குதல்களை மேற்கொண்டன.

ப 10

## ஆஸ்பத்திரிகளில் மந்திரப்பிரிவு ஏற்படுத்துமாறு கோரிக்கை

மந்திரதந்திரங்களால் நோய்களை குணப்படுத்தும் முறையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் இதற்கான ஒரு பிரிவை ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளில் ஏற்படுத்த வேண் டும் என்றும் ருஹுணு மந்திரவாதிகள் சங்கத்தலைவர் சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளார்.

இன்று மருந்தினால் குணப்படுத்த முடியாத வியாதிகளை மந்திரத்தினால் எமது மந்திரவாதிகள் —04 ஆம் பக்கம்பார்க்க

## லெப்.கேணல் கிரேசி புகழுடல் கிளிநொச்சியில் தீயுடன் சங்கமம்

பரப்புக்கடந்தானில் வீரமரணமடைந்த லெப் கேணல் கிரேசியின் புகழுடல் கிளிநொச்சி மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று முன்தினம் கனகபுரம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

முன்னதாகவட்டக்கச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்ட தளபதி கிரேசி — 4 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளை திருத்த இத்தாலியிடம் உதவி கோரல்

வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த ஆதார வைத்தியசாலைகளை திருத்தம் செய்ய இத்தாலிய அரசிடம் சுகாதார அமைச்சு நிதி உதவி கோரியுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு இத்தாலிய அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் வடக்கு கிழக்கு மாகா

## பரீட்சைக்கு 12 ஆயிரம் பேர்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இன்று நடாத்தப்படும் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை வடபகுதியில் மாத்திரம் 68 — 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

கடந்த வெள்ளியன்று மன்னார் பரப்புக்கடந்தானில் நடைபெற்ற சிறிலங்கா இரா

## கனடா-ஒன்ராரியோ நகரில் புதுவருடத்தன்று முத்தமிழ் விழா

## நானாட்டான் முருங்கனில் அலுவலகங்கள் இயங்கவில்லை

## புதுவருடத்தன்று முத்தமிழ் விழா

கனடா-ஒன்ராரியோ நகரில் நடந்த சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு முத்தமிழ் விழா நடாத்தப்பட்டது.

கனடாவில் உள்ள உலகத் தமிழர் இயக்கம் ஏற்பாடு செய்த இவ்விழாவில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்ராரியோ மாநில சட்ட சபை சபாநாயகர் முன்னாள் அமைச்சர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பேச்சு, கவிதை, இருக்கை நாடகப்போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன. (74)

## அலுவலகங்கள் இயங்கவில்லை

நானாட்டான், முருங்கன் பகுதிகளில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொள்வதால் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் எதுவும் நடைபெறவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள இறிகேதவ கன்னியாஸ்திரிகள் மடங்களும்மூடப்பட்டு அவர்கள் மடுவுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இப்பகுதி மக்களும் பெருமளவு இடம் பெயர்ந்துள்ளனர். 33

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## கட்டுப்பாட்டு விலையில் இப்பகுதி மக்களுக்கு பொருள்கள்

காரைநகரில் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்பனை செய்தது.

இச்சங்கத்தின் கிளைகளும், கிராமிய வங்கியும் வழக்கம் பரையில் செயற்பட்டு வந்தது இடம் பெயர்ந்த எல்லாக் குடும்பங்களுக்கும் 1½லீற்றர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள மதவாச்சி, பொலநறுவை,

— 4 ஆம் பக்கம் பார்க்க

நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் யாழ்ப்பாணம் பிற

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வினாத்தாள் திருத்துபவர்கள் கொழும்புக்கு அழைப்பு

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதற்கு வடக்குக் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களையும். விரிவுரையாளர்களையும் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொழும்புக்கு வருமாறு பரீட்சை ஆணையாளர் கேட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரப்பனும் தேர்தலில் போட்டியிட ஜெயலலிதா அனுமதி

அ. தி. மு. க. சட்டப் பேரவை தேர்தலில் ஆர். எம். வீரப்பனுக்கும் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளதாக செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

முன்னதாக வீரப்பனுக்கு எந்தத் தொகுதியும் வழங்கப்படவில்லை எனவும் அ. தி. மு. க. பிரசார பணியில் அவர் ஈடுபடவிருப்பதினா

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி சூடு

நேற்று மாலை 4 மணியளவில் பொன்னாலைக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையே உள்ள கொத்தத்துறை கடலோரமாகச் சென்ற ஹெலிகொப்டர் ஒன்று பலமுறை வட்டமிட்டுச் சுட்டது.

சேத விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. 12

சப்பிரகமுவ மாகாண சபையில்

## எதிர்க்கட்சி உறுப்பினரின் பேச்சு 'ரேப்' வெளியே சென்றது

சப்பிரகமுவ மாகாணசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசிய ஒலிப்பதிவு நாடா இரகசிய பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கஇனோவர்த்தக 'யோசிம்' தொடர்பாக இந்த உறுப்பினர் பேசிய பேச்சு ஒலிப்பதிவு நாடாவே இவ்வாறு வெளியே கொண்டுசெல்லப்பட்டதாம்.

இச்சம்பவம் தொடர்பாக ஆராய அங்கத்தவர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தனது உரை அடங்கிய

— 04ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு மாவட்டத்திலும் அன்னை பூபதிக்கு அஞ்சலி

19 ஆம் திகதி அன்று தியாக தீபம் அன்னை பூபதியின் 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் மணலாறு மாவட்டப் பிரதேசத்தில் பரவலாக இடம்பெற்றன. மணலாறு கிராமங்கள் தோறும் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னைக்கு மலர் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

கலை நிகழ்ச்சிகள் 18 ஆம் திகதி கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி, செம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதிக்கு உரவகை எடுத்துவர அனுமதி

வடபகுதி விவசாயிகளுக்குத் தேவையான ஏழுவகை பசளை வகைகளை இங்கு கொண்டுவர இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# முரசொலிக்கு வந்த கடிதம்

ஆசிரியர்,
முரசொலி

## ஆயருக்குற்ற அவமானம்

அண்மையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாருக்கு ஏற்பட்ட அவலத்தைப் பற்றிக் கேள்வியுற்ற மிருசுவில் புனித நிக்கொலஸ் தேவாலய பங்கு மக்களாகிய நாம் எமது உள்ளக்குமுறலை வெளியிட்டு மனச்சாந்தி காண்பதற்கு மக்கள் அபிமான நாளிதழாம் முரசொலியில் ஒரு சிறு இடத்தைத் தந்துதவுமாறு இறையன்பின் பேரால் கேட்கின்றோம்.

உலகளாவிய முறையில் பரந்து விளங்கும் கத்தோலிக்கத் திருமறை ஒன்றியத்தின் தலைவரான புனித பாப்பரசரினால் நேர்முகமாகவோ, பிரதிநிதித்துவமூலமாகவோ திருநிலைப்படுத்தப்படுபவர் தான் ஒரு கத்தோலிக்க ஆயர், குறிப்பிட்ட ஒரு மறைமாவட்டத்தினை ஞானாட்சி செய்யும்பரிபூரண உரிமையை அவருக்குவழங்குகின்றார் திருத்தந்தை ஆயர் ஒருவரைத் திருநிலைப் படுத்தும் புனித பாப்பரசர் கடவுளை விளித்து "எல்லாம் வல்ல இறைவா, ஆயராக நாம் தெரிந்தெடுத்திருக்கும் இவருக்கு மோட்சராட்சியத்தின் திறவு கோல்களை அளித்தருளும். இவர் பூலோகத்தில் கட்டுவன எல்லாம் பரலோகத்திலும் கட்டப்படக் கடவனவாக இவர் பூலோகத்தில் அவிழ்ப்பதெல்லாம் பரலோகத்திலும் அவிழ்க்கப்படக் கடவனவாக, இவர் யாருடைய பாவங்களைப் பொறுக்க மாட்டாரோ அவர் பாவங்கள் பொறுக்கப்படாமல் இருக்கக் கடவன. யார் பாவங்களை இவர் பொறுப்பாரோ அவர் பாவங்களைத் தேவரீரும் பொறுப்பீராக. இவரைச் சபிக்கிறவன் சபிக்கப்படக் கடவனாக, இவரை ஆசீர்வதிப்பவன் மேல் ஆசீர்வாதம் பொங்கி வழியக் கடவதாக. உமது சபையை ஆளவும் இவருடைய பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள மக்களை இறைவழியில் நடத்தவும் மேற்றிராணியாரின் பொற்சிம்மாசனத்தை இவருக்குத் தந்தருளும். என்றென்றும் இவருடைய அதிகாரமாகவும், வல்லமையாகவும், உறுதியாகவும் நீர் இருப்பீராக" என்று திருவாய் மலர்ந்து, இவர் விரலில் மோதிரமணிந்து, கரத்தில் செங்கோல் கொடுத்துத் திருமறையின் ஒரு இராசகுருப்பிரசாதியாக வந்திக்கான் பேராலய பேரேட்டில் பதிவு செய்து வைக்கின்றார் திருத்தந்தை.

ஆகவேதான் மன்னார் மறை மாவட்டத்தின் மக்கள் தங்கள் ஆயராம் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரில் புனித பாப்பரசரையும், மானிட அவதார மன்னவனாம் கிறிஸ்துவையும் மிகப் பூஜித வணக்கத்துடன் அன்பு செய்கின்றனர். அவரைச் சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் அவரது மந்தைகள் பிரமாணிக்கமுள்ள கீழ்ப்படிவின் அடையாளமாக அவரது மோதிரத்தைப் பத்தி சிரத்தையுடன் முத்தமிடுகின்றனர். காரணம், உண்மையில், அவர்கள் தங்கள் ஆயரின் வடிவில் தங்கள் மத்தியில் கிறிஸ்துவைக் காண்பதேயாகும்.

மன்னார் மறைமாவட்ட ஆயருக்குச் செய்யப்பட்ட அவமதிப்பு எங்கள் இறைவனும், மீட்பருமாகிய கிறிஸ்துவுக்கே செய்யப்பட்டதென்பதால் எங்கள் உள்ளங்கள் கொதிக்கின்றன, குமுறுகின்றன. எங்கள் பேரன்புக்குரிய மேய்ப்பன் சவுந்தரநாயகம் அடிகளாருக்குத் துன்பம் ஏற்படுத்தியவர்களை அவரது ஞானப் பிள்ளைகள் என்ற உணர்வினால் கண்டனஞ் செய்கின்றோம். ஆயருக்குற்ற அவமானம் ஆண்டவன் கிறிஸ்துவுக்குற்ற அவமானத்துடன் சங்கமமாகி மீட்பின் கிரயமாகியுள்ளதென நினைத்து அமைதிகொள்கின்றோம் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை, ஆயருக்கும் மன்னார் மறைமாவட்ட விசுவாசிகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மிருசுவில் பங்கு மக்கள்
புனித நிக்கொலஸ் தேவாலயம்

குறிப்பு:- இவ்வறிக்கையில் பங்குத் தந்தையின் ஒன்றிணைப்பில் கிளாலி, கச்சாய், தவசிக்குளம் உப பங்குகளின் மக்களும் மனப்பூர்வமாகப் பங்குபற்றுகின்றனர்.

# இனப்பிரச்சினை; காலம்கடத்துகிறார் ஜனாதிபதி

## தீர்வுக்கான அறிகுறி இல்லை - ஜேர்மன் சஞ்சிகை

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டுவது போல் பாசாங்கு செய்து வீணே காலத்தைக் கடத்தி வருகிறார் என்று ஜேர்மனியிலிருந்து வெளிவரும் சஞ்சிகையொன்று தனது ஆசிரியத் தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

30வருட அரசியல் அனுபவம் கொண்ட இன்றைய ஜனாதிபதி பிரச்சினையைத்தீர்ப்பதற்கான வழிவகைகளைத் தெரியாதவரல்ல. 60 வருட அரசியல் அனுபவம் பெற்ற முன்னைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா தனது இளைப்பாறும் காலத்தில் தமிழ் மககளுக்கு என்ன பிரச்சினை என்று தனக்கு விளங்கவில்லை என்று கூறியதுபோல் 'தெரியாதது' மாதிரி இன்றைய ஜனாதிபதியும் செயற்படுகிறார் என இச்சஞ்சிகை எழுதியுள்ளது.

இந்தியாவின் இலங்கை மீதான நிலைப்பாட்டாலேயே இன்றைய ஜனாதிபதிக்கு இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு 'ஆராய்ச்சி' செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா அதிகரித்துவரும் அகதிகள் தொகையை வைத்து இலங்கைப் பிரச்சினையில் வருத்தம் கொண்டுள்ளதாக எப்போதும்போல் இப்போதும் மறைபொருளாகக் கூறிவருகின்றது.

இதனால் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியத் தலையீட்டிற்கு வாய்ப்பில்லாத முறையில் உத்திகளைக் கையாள இலங்கை அரசு தொடங்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் புதிய மாகாண எல்லை வரையறுப்புக்களைச் செய்து தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டவும், காலப்போக்கில் வட-கிழக்கு இணைப்பை இல்லாதொழிக்கவும் தயாராகி வருகிறது.

இலங்கை ஜனாதிபதியின் உள்நோக்கம் ஒருபுறம், பேச்சு மறுபுறமுமான இந்தப் போக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தந்துவிடும் அறிகுறிக்குரியதல்ல. இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாய் மாறிப் போயுள்ள இனப்பிரச்சினையை என்ன என்று தெரியாதது போல கேள்வி எழுப்புவது வெறும் பாசாங்கே. இது காலத்தைக் கடத்தும் ஒரு காரியமே.

இவ்வேளையில் இனபபிரச்சினைக்கான தீர்வை எதிர்க்கட்சிகள் குறிப்பாகத் தமிழ்க் கட்சிகள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு ஆளுக்கொரு தீர்வை முன்வைத்துள்ளனர், இது எதிர்க்குத் துணைபோகும் காரியமே என ஜேர்மனியிலிருந்து வெளிவரும் இச்சஞ்சிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பட்டப்பின் படிப்பிற்காகப் பதிவுசெய்தல்-1991

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1990 / 91 கல்வியாண்டின் பின்வரும் பாட நெறிக்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 31 - 05 - 1991 வரை கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரீகம், அரசியல், சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், மெய்யியல், மொழியியல், கிறிஸ்தவநாகரீகம், சித்த மருத்துவம், நுண்கலை.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ 22-04-1991 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக் கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம்

## திருப்பங்காண அருள்வாய்

அரனேயெம் அகந்தோறும் புகுந்து நின்றாய்!
அறியாமை இருள் போக்கி ஆக்கந் தந்தாய்!
உரமான தமிழீழத் துணர்வு நச்சி
உளமாரப் போராடு வோருக் கெல்லாம்
திரமான உடல் நலமும் உணர்வு மூட்டித்
தீந்தமிழர் தம் வாழ்வில் திருப்பங்காண
அருள்வாய் நீ கல்வியங் காடுநண்ணி
அமர்ந்திலங்கும் வீரபத்ர தேவே போற்றி!

- நா. மகாலிங்கசிவம்

(கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயமஹோற்சவத்தை முன்னிட்டுப் பிரசுரிக்கப்படுகிறது)

## பாய்மர ஓட்டப்போட்டி ஆய்வு நிறுவனம் நடாத்தவுள்ளது

மே தினத்தை யொட்டி தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்தவுள்ள பாய்மர ஓட்டப் போட்டி விதிகள் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

1 பங்கு பற்றும் கலங்கள்: பிரிவு ரீதியாக, ஒவ்வொரு பிரிவிலும் எந்த வகையான கலங்கள் கூடுதலாக உள்ளவோ அதைப் போட்டியில் பயன்படுத்தலாம்.

(அ) அளவுகள்: நீளம், அகலம், தோற்றம் ஒரே வகையாகவும் சம அளவாகவும் இருத்

(அ) அளவுகள் ;(பாய் மரப் போட்டியை ஒத்தது)

(ஆ) கலங்களில்:

தடுப்புகள்(துலாக்கை/மரக்கோல்சவள்) பாவிக்கலாம். சுக்கான் பாவிக்கலாம்.

(2) பங்குபற்றுவோர் :ஐந்து பேர் ஒருவர் ஓட்டி, இருவர் தடுப்பு வலித்தல்.

(3) போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பு கலங்களைக் கட்டுதல் போன்ற ஆயத்தங்கள் செய்யக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில் 'சன்லைட்'

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் நேற்று முன் தினம் பொதுமக்களுக்கு சன்லைட் சவர்க்காரம் விநியோகிக்கப் பட்டது.

8 ரூபா 25 சதமாக விற்பனை செய்யப்பட்ட சன்லைட் சவர்க்காரத்தைபெருந் தொகையானோர் வரிசையில் நின்று பெற்றுக் கொண்டனர்.

(ப 32

## மௌனகுரு சுவாமி ஜெயந்திதினம்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் வாழ்ந்த சித்தரான மௌனகுரு கடவுள் சுவாமிகளின் ஜெயந்தி தினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இவரது அடியார்களால் கொண்டாடப்படவுள்ளது.

உடுவிலில் அமைந்திருக்கும் 'கடவுள் சந்நிதி' ஆச்சிரமத்தில் ஜெயந்தி தின பூஜை, தியானப் பூஜை, சொற்பொழிவு மகேஸ்வரபூஜை என்பன நடைபெற உள்ளது என

# போரால் 5000 குவைத் பிரஜைகளை காணவில்லை என அறிவிப்பு

கடந்த ஆகஸ்ட் மாதம் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததையடுத்து ஐயாயிரம் குவைத் பிரஜைகளும், இராணுவத்தினரும் காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது

இவர்களில் அனேகமானோர் ஈராக்கில் சிறை வைக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க ஈராக்கினால் சிறை வைக்கப்பட்டிருந்த குவைத் அரச குடும்பத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.


## மணமகன் தேவை

நற்பண்புள்ள, இந்து சமய, க. பொ. த. உயர்தரம் (விஞ்ஞானம்) சித்தியடைந்த, செவ்வாய்க்குற்ற மற்ற அண்மையில் 32 வயது நிரம்பிய ஒரே மகளுக்குப் பின் வரும் தகுதிகளில் ஒன்றுள்ள வரன் தேவை, இலங்கைப் பொறியியலாளர், ரீ. ஏ., ஆர். எம். பி., இலங்கைப் பட்டதாரி.

முகவரி:

விளம்பர இலக்கம்: 299
மே/பா.
முரசொலி,
கல்வியங்காடு.

04101


விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி 38×25 செ. மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 31-05-1991 இற்கு முன்பாக, கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 31-5-91 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

— பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
18-04-1991

04100

லம், தோற்றம் ஒரே வகையாகவும் சம அளவாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) கலங்கள்: துடுப்புகள் தாங்குதடி/ மரக்கோல் எதுவும்பாவிக்கக்கூடாது கக்கான் மட்டும்பாவிக்கலாம். அதுவும் சமஅளவானதாக இருக்க வேண்டும். (பாய் மரத்திற்கு தேவையான உபகரணம் தவிர).

2 பாய் சம அளவான ஒரே வகையான (உயரம், நீளம், அகலம்) தாக அமைய வேண்டும்.

3 ஓட்டிகள்:

(அ) மூன்று பேர் பங்குபற்றலாம். இருவர் பாயைக் கட்டுபவர். மற்றவர் ஓட்டியாவர்.

(ஆ) வயதுக் கட்டுப்பாடு, ஆண் பெண் வேறுபாடு இல்லை.

4 போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பு பாயை விரித்துக் கட்டுதல் கூடாது

5 தூரம்: ஒரு மைல்.

மாவட்ட ரீதியாக:

மரக்கலத்திலான பாய்மரம் போட்டியில் ஈடுபடுத்தப்படும்.

துடுப்பு வலித்தல் போட்டி

பங்குபற்றும் கலங்கள்: பிரிவு ரீதியாக (பாய் மரப் போட்டியை ஒத்தது)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹோற்சவ சமய பிரசங்கம்

இணுவில் மேற்கு ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோவிலில் மஹோற்சவ காலச் சமயப் பிரசங்கங்கள் தினமும் இரவு 7 மணியளவில் சுவாமி வீதியுலாவின் பின் நடைபெற்று வருகின்றது. பலாலி ஆசிரியகலாசாலை விரிவுரையாளரும் சைவ அறிஞருமான இவமகாலிங்கம் இப்பிரசங்கங்களை தினமும் மேற்கொண்டு வருகின்றார்.

பன நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப10

## கருத்தரங்கு

தேசிய கூட்டுறவுச் சபையும் பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கமும் இணைந்து ப.நோ.கூ. சங்கங்களின் முகாமையாளர்களுக்கான கருத்தரங்கொன்றை 27 ஆம் திகதி பருத்தித்துறை ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் தலைமையில் நடாத்துகின்றது. (15)


## கொம்பியூட்டர் பயிற்சி

IDP யின் சேவை மீண்டும் ஆரம்பமாகிறது
யாழ்-மல்லாகம் கிளைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது
BASIC, D-BASE-III+ Courses
ஆரம்பம்: 28-04 1991 (8. 30 a. m)
★ Spoken English வகுப்புகளும் நடைபெறும்

IDP COMPUTER CENTRE
Manipay Road, Manipay.
(மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி)

04102

# பிறப்பிலிருந்து இறப்புவரை அனைவருக்கும் இலவச காப்புறுதித் திட்டம் அமுலாகும்

பிறப்பிலிருந்தே அனைவரையும் காப்புறுதி செய்யும் புதிய திட்டமொன்று விரைவில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு முதல் இறப்பு வரை அனைவரையும் காப்புறுதி செய்யும் திட்டம் முழுவதும் இலவசமாகவே மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான மதிப்பீட்டு வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலவசக்கல்வி, இலவச மருத்துவம் ஆகிய திட்டங்களுடன் இந்த பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான இலவக்காப்புறுதித் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறிக்கைகள்தெரிவிக்கின்றன]

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் எவ்வளவு தொகையை இழப்பீட்டுத் தொகையாக வழங்குவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

## தலையணை மர்மம் வவுனியாவில் அம்பலமானது

கர்ப்பிணிகள் போல் வேஷமிட்டு, தடை செய்யப்பட்ட சில பொருள்களைக் கொண்டு வருவதற்கு முற்பட்ட இரு பெண்கள் வவுனியாவில் இராணுவத்திடம் சிக்கிக் கொண்டனராம்.

வயிற்றில் தலையணைகளைக்கட்டி அதற்குள் குறிப்பிட்ட பொருள்களை அவர்கள் கொண்டுவர முயன்ற போதே குட்டு வெளிப்பட்டதாக அறிய வந்துள்ளது.

அவர்களைத் தாக்கியபின் இராணுவத்தினர் விடுதலை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (ப 32)

## மண்டாவால் தாக்கப்பட்டு மீனவ இளைஞர் கடலில் பலி!

பாஷையூர்க் கடற்பகுதியில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவம் ஒன்றில் இன்னத்துரை ராஜன் (வயது 18) என்னும் மீனவ வாலிபர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை நிகழ்ந்தது.

மயிலிட்டியிலிருந்து பிரஸ்தாப வாலிபர் பாஷையூர்ப் பகுதிக்கு அகதியாக வந்திருந்தவர்.

சம்பவதினம் அதிகாலை இவருக்கும் மற்றுமோர் நபருக்கும் இடையே முதலில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் அப்போது மண்டாவினால் தாக்கப்பட்டு நீரில் அமிழ்ந்ததாகவும் சில மணித்தியாலங்களின் பின் சடலம் மீட்கப்பட்டதாகவும் அறிய வருகின்றது.

மண்டாவினால் தாக்கியதாகக் கூறப்படுபவரும் அவருடன் நின்றமற்றொருவரும் சரணடைந்ததையடுத்து விடுதலைப் புலிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (16)

### ஒன்றுகூடல்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தினால் சங்க அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று சாவகச்சேரி கைவிர் கல்லூரியில் நடைபெற்றது.

ஏனைய தொழிற் சங்கங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் போது ஏற்கனவே இவ் வர்த்தகர் சங்கத்தில் பொருளாளராக இருந்து கொலை செய்யப்பட்ட செல்வராசாவின் குடும்பத்தில் உள்ள ஐந்து பிள்ளைகட்கும் தலா 5000 ரூபா வீதம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட சேமிப்புப் புத்தகங்களும் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்பட்டன. (ப 5)

## ஒரு கோடி ரூபா நஷ்டம்; வரணி வடிசாலை தீயினால் நாசம்

வரணி வடக்கில் அமைந்திருந்த பனம் பொருள் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான தென்மராட்சிப் பகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் வடிசாலை நேற்று முன்தினம் அதிகாலை தீப்பற்றி எரிந்து முற்றிலும் நாசமாகியுள்ளது.

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான இவ்வடிசாலை எரிந்ததால் பலர் வேலையிழந்துள்ளனர். தென்மராட்சிப் பகுதியில் உள்ள சீவல் தொழிலாளர் அனைவருமே இதனால் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது

### வட்டுவில் ஞாயிறு சமய வகுப்பு

வட்டு சிவன் இந்து வாலிபர் சங்கத்தினர் பிரதி ஞாயிறுக் கிழமைகள் தோறும் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் சைவசமய வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர்.

சங்கத் தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் கி. துரைச்சாமி தலைமையில் நடைபெறும் இவ் வகுப்புக்களில் அறிஞர்கள் பலர் விரிவுரையாற்றி வருகின்றனர். (12)

## உள்ளூராட்சிச்சபைகளுக்கு அதிகளவான அதிகாரங்கள்

புதிதாக அமைக்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகளவான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அடுத்தமாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

புதிய உறுப்பினர்கள் தெரிவானதும் அவர்களுக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றி விளக்கமளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆளடையாள அட்டை பெற 4000 பேர் விண்ணப்பம்

தேசிய ஆளடையாள அட்டை பெறுவதற்காக யாழ் செயலகத்தின் மூலம் முன்னர் விண்ணப்பித்தோருக்கு விரைவில் ஆளடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக கொழும்பில் ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது

இவ் விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து விரைவில் இங்கு கொண்டுவரப்படவுள்ளன.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் ஆளடையாள அட்டை பெறுவதற்கென சில மாதங்...

## ஒய்வூதியர்களுக்கு மருந்துவகைகள் தருவித்து வழங்க சங்கம் முயற்சி

ஒய்வூதியர்களுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை நல்லூர்த் தொகுதி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

மிகவும் தட்டுப்பாடான மருந்து, விசேட உணவு, பால் மா வகைகளையும் பெற்று ...

## பொது முகாமையாளர் இடைநிறுத்தம்;

(நேற்றைய தொடர்ச்சி)

## நாவலர் நிறுவிய கஞ்சித் தொட்டித் தருமம்

### ஊக்குவித்த உத்தமர்

கஞ்சித்தொட்டித் தருமத்தில் நாவலருடன் முன்னின்று உழைத்தவர் இ. பிறிற்றோ (C. Brito) ஆவர். இவர் மானிப்பாயினைச் சேர்ந்தவர். நன்னித்தம்பி முதலியாரினதும் சேர் பொன்னம்பலம் இராமநாதனினதும் உறவினர். இவர் கஞ்சித் தொட்டித் தருமத்திற்கென ரூபா 45 உதவினார். இவர் கத்தோலிக்கப் பாதுகாவலன் என்னுஞ் செய்தித்தாள் வாயிலாகப் பொதுமக்களிடம் தருமத்தின் பொருட்டுப் பொருளுதவியினை நாடினார். நாடோறும் நான்கு மணியளவிற்கஞ்சித் தொட்டி நடத்தப்படும் இடத்திற்குச் சென்று கஞ்சி உணவு பெறுவோர்க்கு அடையாளச் சீட்டு வழங்கி, அவரவின் ஊர், பெயர், வயது முதலிய விபரங்களைத் தயாரித்து வந்தார்.

இத் தருமம் பொதுமக்கள் நலனை முன்னிட்டு உழைக்கும் அறப்பணியாளரினதும் செய்தித்தாள்களினதும் உள்ளத்தினைக் கவர்ந்தது. 1877 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 11ஆம் தேதி வெளிவந்த இலங்கைநேசனில் இத் தருமம் பற்றிய விளம்பரம் வருமாறு வெளிவந்தது.

### கஞ்சித் தொட்டி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சார்ந்த கிராமப் பிடியிலிருக்கும் சிறீ. வைத்தியநாதர் பொன்னம்பலம் தென்னந் தோட்டத்தில் இந்த மாதம் 3 ஆம் திகதி துவக்கம் வண்ணார்பண்ணைச் சைவசமய தருமப் பிரபுக்களால் தற்காலப் பஞ்சஉபத்திரவத்தால் சீவனோபாதிப்படும் ஏழை எளியவர்களுக்குப்பிரபுக்கள்மிக ஆசையோடு தருமந்தேடுவதற்கான சமயமாகிய இத்தருணத்திற் பின்னில்லாது முன்னின்று செய்யத் துணிந்த துணிவு மிகவும் வியக்கப்படத்தக்கது. அரிசி தென் விலை அதிகரித்தும் இத்தைக் கையிட்ட புண்ணியவான்கள் எவ்வாறு ஒப்பேற்றுவரோ தெரியாது. ஐக்கியமே முக்கியம். ஆகவே வண்ணார்பண்ணை, நல்லூர், கண்டிக்குழி முதலாய இடங்களிற் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் மற்றும் சுற்றுப்பற்றுகளிலுமிருக்கிற எவரெனிலும், யாழ்ப்பாணத்தில் இதற்கு முன் ஒருக்காலும் நடவாத இப்பெரு நன்மையான தருமத்தை நிலைநாட்டி வருவாரேல் அப்படிப்பட்ட தரும சாகிய சந்தனருக்கெவ்வளவு பெருநன்மை என்பதைப் பேசவேண்டுமா? தருமத்தைச் செய்யத் தூரம் போக வேணுமா? அறம் செய விரும்பு. ஒருநாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 22, 25 ரூபாவரையிற் செலவிடப்படுகிறது. அநேக சனங்கள் வந்து கஞ்சி குடித்து ஆறுதலடைகிறார்கள். இம் முயற்சியிற் கையிட்டவர்கள் இன்னுஞ் சிலகாலம் நிலைத்து எளியவர்களுக்கு ஆறுதல் செய்யும்படி தருமோபகாரிகளான எவரெனிலும்தங்கள்தங்களாலாக வேண்டிய பெருதவி செய்வதான தொகைப்பணத்தை அல்லது அரிசி முதலானவற்றையேனும் அக் கஞ்சித்தொட்டி இடத்துக்கு அனுப்பிவைக்கப்படுமானால் அதை நடத்துபவர் நடத்தி வைப்பார். அல்லது தாங்களே போய்நின்று நடப்பிக்கலாமெனும் பேராசையுடையராயிருக்கும் படி ஏவுகிறோம். ''ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ''

### தருமச் சங்க உதயம்

இத் தருமம் இயங்கத் தொடங்கிய பின் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் துவைனம் (W. C. Twynam) மாவட்ட நீதிபதி சேரம் (D. Saram) மாகாண உதவியாளர் (Provincial Assistant) பிறைம் (C. Prime) முதலியோர் தம்மையுஞ் சுதேசிகளையுங் கொண்ட கஞ்சித் தொட்டித் தருமச்சங்கம் ஒன்றினை நிறுவும் நோக்கத்துடன் 2.8.1877 இல் யாழ்ப்பாண ஆபத்துக்குதவிச் சங்கத்தின் மருத்துவசாலைச் சபா மண்டபத்தில் இ. பிறிற்றோ பொதுநலப் பணியாளருக்கு அனுப்பிய சுற்றறிக்கையின் உதவி கொண்டு இக் கூட்டம் கூட்டப்பட்டது. துவைனம், சேரம், பிறைம் ஆகியோர் சங்க ஆலோசகராகவும் பிறிற்றோ தலைவராகவும், சேஞ் அவகைக்கோன், ஆறுமுகநாவலர், அருணாசலம் செட்டியார், இறேனியர், யோன்பிள்ளை, ...

## பொது முகாமையாளர் இடைநிறுத்தம்; வேலை நிறுத்தத்திற்கு முஸ்தீபு!

யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் பதவியில் இருந்து இடை நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது

குற்றப பத்திரம் எதுவும் கையளிக்காமல் பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து சங்கத்தின் ஊழியர் தொழிற் சங்கம் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

பொது முகாமையாளர் மீதான இடை நிறுத்தல் உத்தரவை விலக்கிக்கொள்ளா விட்டால் தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக சங்கத்தின் தலைவர் ப. அம்ரனி பணிப்பாளர் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (16)

## மாபெரும் மே தின ஊர்வலம்

## முரசொலியுடன் பிரசாரம்

யாழ் மாவட்டத்தில் மே தின ஊர்வலம் மே மாதம் 1ஆம் திகதி மருதனார்மடம் சந்தியில் இருந்து ஆரம்பமாகி யாழ் நகர்வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

மே தின ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு முற்றிலும் புதிய பாணியில் தற்போது அறிவித்தல் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ் நகரப் பகுதிகளில் பொது மக்கள் கூடும் முக்கிய சந்திகளில் பொய்க்கால் குதிரை, விலங்குவேஷம் அணிந்த சிலரால் முரசறைந்து—முரசொலியுடன் ஆடிப் பாடி மே தினம் பற்றியும், மே தின ஊர்வலம் பற்றியும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ப-10)

மா வகைகளையும் பெற்று ஓய்வூதியர்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சங்கத்தின் செயலாளர் திரு வி எஸ் திருச்செல்வம் தெரிவித்தார். (66)

பெறுவதற்கென சில மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப் பட்ட 4000 விண்ணப்பங்கள் கப்பல்மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## காரைநகரில் ஒரே இரவில்

## பலவீடுகளில் திருடர் கைவரிசை

கடந்த 14 ஆம் திகதி இரவு வேளையில் காரைநகர் வடக்குப் பகுதியில் பல வீடுகளில் திருட்டு நடைபெற்றுள்ளன.

சிவகாமி அம்பாள் வீதியைச் சேர்ந்த சைக்கிள்கடை உரிமையாளர் சின்னராசா அதே வீதியில் உள்ள பொ. சத்தியமூர்த்தி கண்ணன் வீதியில் உள்ள திருமதி சுந்தரி ஆகியோரது வீடுகளில் இத்திருட்டு முயற்சிகள் இடம் பெற்றுள்ளன. (ப35)

## சிங்கள மாவட்டங்களில் விசேடபரிசளிப்பு தமிழ்ப்போட்டி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தமிழ் மொழி மூலமான பரிசளிப்புப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

தேசிய தமிழ்மொழிப் போட்டிகள் நடாத்தப்படாத கொழும்பு, காலி, மாத்தறை, அம்பாந்தோட்ட, அனுராதபுரம், பொலநறுவை, குருநாகல், கேகாலை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களிலேயே இத்தமிழ் பரிசளிப்புப்போட்டிகள் நடாத்தப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இறேனியர், யோன்பிள்ளை, யேசேப்பு, கார்த்திகேசர், குமாரசூரியர், பழனியப்பச் செட்டியார், சவுரிமுத்துமுதலியார், சின்னத்தம்பி, தம்பு ஆகியோர் சபை உறுப்பினராகவும் வீரபத்திரர் கஞ்சித் தொட்டித் தரும மேற்பார்வையாளராகவும், றட் (J Rudd) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அரிசி கொடுப்பதற்குச் செட்டிக்கடையொன்றனையும் ஒழுங்கு செய்தனர்.

### தருமப்பணிக்கான நிதி

நாவலர் முதலிய கஞ்சித்தொட்டித் தருமப் பணியாளர் கொழும்பிலுள்ள செல்வரின் உதவியினை நாடினர் இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குக் கடல் வழியாகவே சென்றனர். இ கதிரவேற்பிள்ளை என்னும் வியாபாரி ஆடித் திங்களிற் கொழும்புக்குச் சென்று யாழ்ப்பாணத்தில் நாவலர், பிறிற்றோ முதலியோர் ஆற்றும் கஞ்சித்தொட்டி தருமம்பற்றி அங்குள்ளோர்க்கு விரித்துரைத்தார்.

நாவலர் நிறுவிய இத் தருமம் வண்ணார் பண்ணையிற் கொதாரியினாலும் பஞ்சத்தினாலும் வருந்திய மக்களுக்கே பயன்பட்டது. நாவலா, பிறிற்றோ போன்றோர் ஏனைய பகுதிகளில் இல்லாமையாலோ வேறு காரணத்தினாலோ பிற இடங்களில் அல்லலுற்ற மக்களுக்குக் கஞ்சித்தொட்டி நடத்தும் தொண்டர்குழாம் இயங்கவில்லை இதனைக் குறித்து இலங்கை நேசன் ஆவணித் திங்கள் 12ஆந் தேதி இதழில் வருங் கருத்துத் தெரிவிக்கப்பட்டது:-

### கஞ்சித் தொட்டித் தருமம்

இத் தருமத்தை முயன்று நடத்துபவர்கள் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் மாத்திரம் நடத்துவது, எட்டிய அயலூர் ஏழை எளியவர்களுக்கு உபயோகப்படாததொன்றாம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார்ச் செய்திகள்

### ஊழியர்கள் வெளியேறுகிறார்கள்

மன்னார்த் தீவில் இராணுவ நடவடிக்கைகளினால் பல மாதங்களாக வெளியேற முடியாமல் அகப்பட்டிருந்த வெளிமாவட்ட அரச ஊழியர்கள் பலர் தற்போது வெளியேறி வருகின்றனர்.

கடல் மார்க்கமாக சிறிய படகுகளில் இவர்கள் வெளியேறி வருகிறார்கள். இதனால் மன்னார்க் கச்சேரி உட்பட மற்றும் அரச அலுவலகங்களில் வெளிமாவட்ட ஊழியர்களின் வரவு குறைந்துள்ளது.

### ஆடு, மாடுகள் மீது படையினர் சூடு

மன்னார்த்தீவில் தரைவைவயில் மேய்ந்து திரியும் ஆடு, மாடுகள் படையினரின் வேட்டுக்குப் பலியாகின்றன. இவை இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்து உள்ளனர். இது பற்றி விசாரிக்கச் செல்பவர்கள் மிரட்டப்படுகின்றனராம்.

### நூலகத்தில் நூல்கள் திருட்டு

மன்னார் பொதுசன நூலகம் தற்போது இயங்கி வருகிறது. இங்கு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் நூலகத்தில் இருந்து நூற்றுக்கணக்கான புத்தகங்கள் களவாடப்பட்டு இருந்தன. இரவல் கொடுக்கும் பகுதியும் நடைபெற்று வருகிறது.

### தலைமன்னாரில் தடைப் பகுதி

மன்னார்த் தீவில் பேசாலையில் இருந்து தலைமன்னார் வரையிலான குறிப்பிட்ட சில பகுதிகள் இராணுவத்தால் தடை செய்யப்பட்ட பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் எவரும் செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது இது பற்றிய துண்டுப் பிரசுரங்கள் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

### வைத்தியசாலையில் இராணுவம்

மன்னார் ஆதார வைத்தியசாலையில் ...

### மீன் பிடிக்க இராணுவம் தடை

மன்னார் பள்ளிமுனைக் கடற் பகுதியில் இரவில் மீன் பிடிப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மீனவர்கள் பகல் நேரத்தில் கரையை அண்டிய பகுதிகளில் மட்டும் தொழிலை மேற்கொள்ளுகிறார்கள். (17)

### சுற்பிட்டிக்குப் படகுச் சேவை

மன்னார் தாழ்வுப்பாட்டில் இருந்து சுற்பிட்டிக்குப் படகுச் சேவை நடைபெற்று வருகிறது.

இதனால் மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகள் நன்மை அடைந்துள்ளனர். சுமார் 70 மைல் தூரக் கடற் பயணத்திற்கு ஆளுக்கு 200 ரூபா அறவிடப்படுகிறது. எட்டு மணித்தியாலப் பயணமாக இது அமைந்துள்ளது.

இன்னும் சில தினங்களுக்குள் கடற் கொந்தளிப்பு ஏற்பட்டு விட்டால் இப்படகுச் சேவை தடை செய்யப்படும் எனத் தெரிய வருகிறது.

### மன்னார்த் தீவில் தட்டுப்பாடு

மன்னார்த் தீவில் விறகிற்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது காட்டுப் பகுதிகளில் படையினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதினால் பொதுமக்கள் காட்டுப்பகுதிக்குச் செல்ல அஞ்சுவதே இத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

இதனால் பனை மட்டை, பனஞ்சிராய்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. காவோலையும் எரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பெரும் நிலப்பரப்புடன் மன்னார்த் தீவு தொடர்பற்று இருப்பதால் மரக்கறி, வாழைப்பழத்திற்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. தேங்காயைக் காண்பதே அரிதாக உள்ளது வாழைப்பழம்கிலோ நாற்பது ரூபாவாக விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது

---

**காவலரண்...**
படகுச்சேவை நடாத்த அனுமதி வழங்கப்படமாட்டாது என மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

மேலும் நயினா தீவைச் ...

---

★ சுதந்திரக்கட்சி எம். பி. மகிந்த ராஜபக்ஸவின்

# அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீது மே 21இல் மேல் நீதிமன்றத்தில் விசாரணை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம் பியான மகிந்த ராஜபக்ஸ தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனு அடுத்த மாதம் 21ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி இவர் ஜெனிவா செல்வதற்கு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தபோது பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர், நீர்கொழும்பு ஏ. எஸ். பி, சட்டமாஅதிபர், ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவர் அரசாங்கத்திடம் இருந்து ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடும் கோரியுள்ளார்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; "விமான நிலையம் வந்தபோது எனது பொதியில் இருந்த ஆவணங்கள், புகைப் படங்கள் என்பனவற்றை நீர்கொழும்பு உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் குடாஹெட்டி எடுத்துக்கொண்டதுடன் என்னைக் கைது செய்துள்ளார்.

இச் சம்பவத்தால் நான் ஜெனிவாவில் நடைபெற்ற காணாமல் போனவர்கள் தொடர்பான ஐ நா. செயற்குழு 31-வது மாநாட்டில் எனது வழக்கை எடுத்துரைக் கமுடியவில்லை.

நிச்சயம் ட வோய்ஸாவில் மரணம் தொடர்பான ஆவணங்களைத்தவிர ஏனையவற்றை வைத்திருப்பதற்கோ விநியோகிப்பதற்கோ சட்டரீதியாக எந்த தடையுமில்லை யாது.

மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடக்காமல் பாதுகாப்பதே எனது நோக்கமாகும்.

காணாமல்போனவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக பெற்றோர் அல்லது உறவினர்கள் கொடுத்த ஆதார பூர்வமான தகவல்கள் அடங்கிய ஆவணங்களே என்னிடமிருந்து பறிக்கப்பட்டன.

என்மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை, கைது தடுத்து வைக்கப்பட்டது அரசியலமைப்பு ரீதியாக எனக்குள்ள உரிமைகளை மீறுவதாகும் என்று இந்த நீதிமன்றம் உத்தரவிடுவதுடன் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும். படங்களையும் திருப்பி என்னிடம் ஒப்படைக்கவும் உத்தரவிடவேண்டும்" (ப35)

---

**பரீட்சை...**
பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படுகிறது.

இப்பரீட்சையில் சுமார் பன்னீராயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசிற் பரீட்சையில் பதினேழாயிரம் (17,000) பரீட்சார்த்திகள் தோற்றியது குறிப்பிடத்தக்கது. 12

---

**எதிர்க்கட்சி...**
'ரேப்' பொலிஸாருக்கு வழங்கப்பட்ட சம்பவம் ஒரு உரிமை மீறிய செயலாகுமென்றும் தனது பாதுகாப்புக்குப்பெரும் அச்சுறுத்தல் எனவும் அந்த உறுப்பினர் தெரிவித்துள்ளார் ւ33

---

**ஆஸ்பத்திரிகளை...**
ஹொரவப்பொத்தான, பதவிய ஹிங்குராகொட, மெதிரிகிரிய ஆகிய பகுதி ஆஸ்பத்திரிகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளதாகவும், மன்னார் ஆஸ்பத்திரியின் பெயர் இடம்பெறவில்லை எனவும் வடக்கு கிழக்கு மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றைத் திருத்துவதற்கான செலவு விவரங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன (74)

---

**மணலாறு...**
மணை, அளம்பில் ஆகிய கிராமங்களில் இறப்பாக ...

---

**ஆஸ்பத்திரிகளில்...**
குணப்படுத்தி சாதனைகள் நிலை நாட்டியுள்ளனர் பல நோயாளருக்கு இந்த முறையால் பலன் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

---

**லெப்.கேணல் கிரேசி...**
யின் புகழுடலுக்கு கிளிநொச்சி மக்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர் பாண்டியன்குளம்மல்லாவிபகுதிகளிலும் பொதுமக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர். பின்னர் கிளிநொச்சி கந்தசாமி கோவில் பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளின் இராணுவ மரியாதையுடன் புகழுடல் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலையில் தீயுடன் சங்கமமானது. 71)

---

**வினாத்தாள்...**
அமர்த்தப்பட்டுள்ளன.

உயர்தர பரீட்சை முடிவடையும்வரை இவ் ஆப் டேசுகள் நீலம்-வெள்ளை கொடியுடன் போக்குவரத்தில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் நடைபெற்ற இப் பரீட்சைகளின் போது வினாத்தாள்கள் பொலிஸ் பாதுகாப்புடன் பஸ்களில் எடுத்துச் செல்லப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (70. 12)

---

**கட்டுப்பாடு...**
மண்ணெண்ணெயும், ஸ்கி, சன்ஸைற் சவர்க்காரங்களும் ...

---

## ஜனசக்தி கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் ஆரம்பம்

ஜனசக்திக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் இம்மாதம் முதலாம் திகதி முதல் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள ப. நோ. கூ சங்கங்கள் மூலமாகவும் கிராமிய வங்கிகள் மூலமாகவும் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1-4,1991 தொடக்கம் முதலாம் சுற்றுப் பயன்பெறுநர்கள் 458 ரூபாவுக்கான கூறை அந்தந்த இடங்களிலுள்ள கூட்டுறவுக் கடைகள், கிராமிய வங்கிகளில் மைப்புச் செய்ய முடியும்.

இதுவரை காலமும் தபால் நிலையங்களிலும் உபதபால் நிலையங்களிலும் தேசிய சேமிப்பு வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இவ்வேலைகளே இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தேசிய சேமிப்பு வங்கி அறிவித்துள்ளது. (66)

---

**வடபகுதிக்கு...**
மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள், விவசாய சேவைகள் நிலையங்கள் மூலமாக அமோனியம் சல்பேட், ரீ. டீ. எம், 'வி' கலவை, மிளகாய் கலவை I, மிளகாய் கலவைII, உருளைக் கிழங்கு வெண்காயக் கலவை I, உருளைக் கிழங்கு வெண்காயக் கலவை II ஆகிய பொருள்களே இங்கு கொண்டுவர அனுமதிக்கப்பட்டுள்ளன.

வடபகுதிக்குக் கொண்டுவரும் இப் பொருள்களுக்கான புதிய விலைகள் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் இரண்டுலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கடனுக்கு இந்த ஸ்தாபனங்கள் அனுராதபுரத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது ւ66

---

**வீரப்பனும்...**
லேயே அவருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என ஜெயலலிதா அறிவித்திருந்தமை தெரிந்ததே

முன்னதாக எஸ். ரி. சோமசுந்தரத்திற்கும் இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை என அறிவித்த ஜெயலலிதா பின்னர் அவருக்கும சட்டப்பேரவை தொகுதி ஒன்றை வழங்கி ...

---

**வீரமரணம்...**
வுண் வீதியைச் சேர்ந்த 2ஆம் லெப். சிக்கோ. (திருஞானசம்பந்தர்பரமேஸ்வரன்) வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம் 71

---

**முன்னாள்...**
நாடு திரும்பினார். பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் "இது அரசியல் ரீதியாக எனக்கு விடுத்த அச்சுறுத்தல்" என்றார்,

காமினி திஸநாயக்க 1989 ஜனாதிபதிதேர்தலுக்கான ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ...

மன்னார் ஆதார வைத்திய சாலையில் சிருடையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இராணுவ நடவடிக்கையின் போது காயம் அடைந்த இராணுவத்தினரில் பலர் இங்கு சிகிச்சை பெறுவதே இதற்குக் காரணம்.

## பிறப்பு இறப்பு...

தோற்றுவோர் ஆகியோர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு அத்தாட்சிப்பத்திரங்கள்வழங்கப்படுகின்றன.

பத்திரங்களைப் பிரதிபண்ணும் இங்குள்ள நான்கு எழுதுவினைஞர்களால் நாளொன்றுக்குஎன்பது விண்ணப்பங்களுக்குரிய பிரதிகளையே வழங்கக்கூடியதாக இருப்பதால் நேற்றுமட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய ஒருமாத காலம் எடுக்கும் எனவும் இவ் அலுவலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (66)

மேலும் நயினாதீவைச் சுற்றி இலங்கைக் கடற்படையினரும், தரைப்படையினரும் அநேக புதிய சென்றிகளை அமைத்து வருவதாகவும், நயினாதீவு இறங்குதுறையை மண்மூடைகள் அடுக்கி பெரிதாக அமைப்பதாகவும் நயினாதீவிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (78)

## ஆசிரியர்கள்...

அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் படவேண்டும் என்றும் காலம் தாழ்த்திய விண்ணப்பங்கள் எதுவும் இனிமேல் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாணச் செயலாளரிடமிருந்து முன் அனுமதிக்கடிதம் கிடைத்த பின்னரே ஆசிரியர்கள் குறிப்பிட்ட படிவங்களில் உடன்படிக்கை கையெழுத்திட்டே வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 78

கிராமங்களில் சிறப்பாக நடைபெற்றதுடன் மாவட்ட ரீதியான இறுதிநாள் அஞ்சலிக் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் குமுழமுனை கிராமத்திலும் இடம்பெற்றன.

அன்றைய நிகழ்வில் மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரமேஸ், முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வம், மணலாறு மாவட்ட மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் செல்வி நித்தியா, மணலாறு மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் பாரதி, மணலாறு மாவட்ட கலை கலா சாரப் பொறுப்பாளர் குமரன், மணலாறு மாவட்ட அரசியல் பொறுப்பாளர்கள் செம்மலையான், தமிழ்பந்தன், ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளுக்கான புரட்சிப்பாடல்கள், கோலாட்டங்கள், நடனங்கள், கவியரங்கு மற்றும் களத்தில் காத்தான் என்னும் இந்துநடைக் கூத்தும் இடம்பெற்றன. பெரும் தொகையான மக்கள் இவ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (71)

சன்லைற் சவர்க்காரங்களும் மற்றும் உணவுப்பொருள்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன

இப்பகுதியில் இருந்து வெளியேற முடியாதிருந்தவர்களுக்கும் இச்சங்கத்தின் கிளைகளினால் அத்தியாவசியப் பொருள்கள்வழங்கப்பட்டன. (83)

## வினாத்தாள்திருத்த...

துள்ளார்.

வினாத்தாள்களை திருத்துவதற்கு மீள விண்ணப்பித்து அனுமதிக் கடிதம் கிடைக்காதவர்களையும் அல்லது மீள விண்ணப்பிக்காதவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் உயர்தர பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் விரிவுரையாளர்களையும் கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படியும் யாழ் கல்விப்பணிப்பாளர் பல்கலைக் கழகத் துணைவேந்தரைக் கேட்டுள்ளார். (70)

தொகுதி ஒன்றை வழங்கி யிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ.தேசிய கட்சி வேட்பாளர் தெரிவுக்கு நின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாவலர் நிறுவிய...

யிருப்பதால், விடாமுயற்சி கொண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி, சுன்னாகம், வட்டுக்கோட்டை முதலிய இடங்களிலும் ஒவ்வொரு கஞ்சித்தொட்டித் தரும சபை கூடி அன்றாடன்று எளியவர்கள் பசி தீர்க்கக்கூடிய முயற்சி செய்தால் அந்த அந்த ஊர்களிலுள்ள தரும சீலர்களும் தூண்டப் பட்டுத் தருமத்தை விருத்தி செய்வார்களென்பது போதிய நம்பிக்கை.

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள் 221)

என்பதை நாவலர், பிறிதோரு முதலிய அறப்பணியால் உணர்ந்திருந்தனர்.

## நாவலர் சமூகத் தொண்டு

நாவலரின் ஊழ்க்கென வாழாத்தலைமைக்கு இக் கஞ்சித் தொட்டித் தருமம் ஓர் எடுத்துக்காட்டு இதனுடன் அவர் சமூகத் தொண்டு நின்றுவிடவில்லை. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களில்வாழும்தமிழர் கந்தளாய்க் குளத்தினால் நீர் பாய்ச்சக்கூடியகாட்டுப் பகுதிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுச் செப்பனிட்டுப் பயிர் செய்வதைக் குறித்து உழைத்தார். யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் கொடுமைகளைக் கண்டித்து அவர் பதவி மாற்றத்தினை வேண்டித் தேசாதிபதியிடம் விண்ணப்பஞ் செய்தார். பொதுமக்கள் நல்வாழ்விற்காக உழைத்தார்.

(ச.தனஞ்சயராச சிங்கம் எழுதிய 'நாவலர் பணிகள்' என்ற நூலிலிருந்து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவெட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி. 'லக்ஷ்மி'பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 23-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.